பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

14 05 2026 THURSDAY 12 40 PM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தேசிய பேரிடர் மீட்பு படை 140 கோடி மக்களின் நம்பிக்கையை பெற்றுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

2. விவசாயிகளின் நலனில் மத்திய அரசு அக்கறையுடன் உள்ளதாக வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

3. கேரள முதலமைச்சராக திரு. V.D. Satheesan பொறுப்பேற்பார் என்று காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது

4. அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப், சீன அதிபர் திரு. Xi Jinping-குடன் இன்று பெய்ஜிங்கில் பேச்சு நடத்தினார்.

5. தாய்லாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<>>>>>

தேசிய பேரிடர் மீட்புப் படை, நாட்டு மக்களின் நம்பிக்கையை முழுமையாக பெற்றுள்ள மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

தேசிய பேரிடர் மீட்புப் படையில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கான குடியரசுத் தலைவரின் விருதுகளை காஸியாபாதில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கி அவர் பேசினார்.

பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தேசிய பேரிடர் மீட்பு படையினர் செல்லும்போது, மக்கள் நிம்மதி அடைவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தேசிய பேரிடர் மீட்புப் படை கடந்த 20 ஆண்டுகளில் பல்வேறு சாதனைகளை படைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

கோடை வெயில் பாதிப்பு காரணமாக உயிரிழப்புகள் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக, திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

<<<<>>>>>

விவசாயிகளின் நலன்களை பாதுகாப்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக வேளாண் துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், 14 பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதில் அதிகபட்சமாக, சூரியகாந்தி விதைகளுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு 622 ரூபாயும், பருத்திக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு 577 ரூபாயும், எள்ளுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு 500 ரூபாயும் உயர்த்தப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இது, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் என்றும் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>>

மேற்காசிய விவகாரம் காரணமாக பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவிட பிரிக்ஸ் அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகள் முன்வர வேண்டும் என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

பிரிக்ஸ் வெளியுறவு அமைச்சர்கள் நிலையிலான இரண்டு நாள் கூட்டத்தை இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

எரிசக்தி, உணவு மற்றும் உரத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவிட வேண்டும் என்று அவர் கூறினார்.

தீவிரவாதத்திற்கு எதிரான சர்வதேச ஒத்துழைப்பு மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

<<<<>>>>>

புதுமை கண்டுபிடிப்புகளில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இதுதொடர்பான மாநாட்டில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், செமிகண்டக்டர் மற்றும் மருத்துவ தொழில்நுட்ப துறைகளில் இந்தியா சிறந்து விளங்குவதாக அவர் கூறினார்.

புதுமை கண்டுபிடிப்புகளுக்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கமளித்து வருவதாகவும் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

<<<<>>>>>

நமது பாதுகாப்பு படையின் வலிமையை ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை, உலகிற்கு எடுத்துரைத்துள்ளதாக பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர். உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்ட பாதுகாப்பு தளவாடங்கள் ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் முக்கியப் பங்கு வகித்ததையும் சுட்டிக்காட்டினர்.

ஆப்பரேஷன் சிந்தூரின் வெற்றி வரலாற்றுச் சிறப்புமிக்கது என்றும் திரு. சஞ்சய் சேத் தெரிவித்தார்.

<<<<>>>>>

சர்க்கரை ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது.

இந்த தடை உத்தரவு செப்டம்பர் இறுதிவரை செயல்பாட்டில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>>

தில்லி செங்கோட்டை அருகே நேரிட்ட குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பான வழக்கில் குற்றப்பத்திரிகையை தேசிய புலனாய்வு அமைப்பு தாக்கல் செய்துள்ளது.

7 ஆயிரத்து 500 பக்கங்களை கொண்ட இந்த குற்றப்பத்திரிகை விரிவான விசாரணைக்குப் பிறகு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தேசிய புலனாய்வு அமைப்பு கூறியுள்ளது.

588 சாட்சிகளின் அறிக்கைகள், 395 ஆவணங்கள் இதில் இடம்பெற்றிருப்பதாகவும் புலனாய்வு அமைப்பின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தில்லி செங்கோட்டை அருகே நேரிட்ட இந்த கார் குண்டுவெடிப்பு சம்பவத்தில் 11 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>>

கேரள முதலமைச்சராக திரு. V.D. Satheesan பொறுப்பேற்பார் என்று காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் பொதுச்செயலாளர் திருமதி. தீபா தாஸ்முன்ஷி இதற்கான அறிவிப்பை வெளியிட்டார்.

கேரள காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம் கடந்த 7ஆம் தேதி நடைபெற்றதாகவும், இதில் சட்டப்பேரவை கட்சித் தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான அதிகாரம் காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜூன கார்கேவுக்கு வழங்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் அடிப்படையில் இதற்கான அறிவிப்பு வெளியிடப்படுவதாகவும் திருமதி. தீபா தாஸ்முன்ஷி தெரிவித்தார்.

இதற்கிடையே, கேரளாவில் காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம் திருவனந்தபுரத்தில் இன்னும் சற்றுநேரத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சட்டப்பேரவை காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. V.D. Satheesan தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும், இதனைத் தொடர்ந்து ஆளுநரை சந்தித்து புதிய அரசு அமைக்க அவர் உரிமை கோருவார் என்றும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

140 உறுப்பினர்களை கொண்ட கேரள சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில், காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி 102 இடங்களில் வெற்றிபெற்றுள்ளது.

<<<<>>>>>

தமிழகத்தின் நிதிநிலை குறித்து முதலமைச்சர் திரு. விஜய் இன்று சென்னையில் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

நிதிநிலை தொடர்பாக வெள்ளை அறிக்கை வெளியிடப்படும் என்று பதவியேற்ற போது அறிவித்திருந்த நிலையில், முதலமைச்சர் தற்போது இந்த ஆலோசனையை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே, இம்மாதத்திற்கான மகளிர் உரிமைத்தொகை விரைவில் விடுவிக்கப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த திட்டத்தை சீரமைப்பு செய்வதற்கு காலஅவகாசம் தேவைப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>>

உத்தரபிரதேசத்தில் நேற்று பலத்த காற்றுடன் பெய்த மழை காரணமாக, உயிரிழந்தோரின் எண்ணிக்கை 89-ஆக அதிகரித்துள்ளது.

மின்கம்பங்கள் சரிந்தது, மரங்கள் முறிந்து விழுந்தது மற்றும் வீடுகள் சேதமடைந்ததன் காரணமாக உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதில் 53 பேர் காயமடைந்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

114 கால்நடைகள் உயிரிழந்துள்ளதாகவும், 87 வீடுகள் சேதமடைந்திருப்பதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரயாக்ராஜ் மாவட்டத்தில் மட்டும் 17 பேரும், Bhadohi மாவட்டத்தில் 16 பேரும், Fatehpur மாவட்டத்தில் 9 பேரும் உயிரிழந்துள்ளனர்.

மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடியாக மீட்பு பணிகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

<<<<>>>>>

மேற்குவங்கத்தில் உள்ள அனைத்து அரசு பள்ளிகளிலும், காலை இறைவணக்க கூட்டத்தில், வந்தேமாதரம் பாடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவினை பள்ளிக் கல்வித்துறை பிறப்பித்துள்ளது.

இந்த உத்தரவு உடனடியாக செயல்பாட்டிற்கு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் இது பொருந்தும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>>

ஆன்லைன் விளையாட்டு முறைகேடு தொடர்பான வழக்கில், அமலாக்கத்துறை பல்வேறு இடங்களில் சோதனை மேற்கொண்டு வருகிறது.

தில்லி, குஜராத், மத்தியப்பிரதேசம் மற்றும் ஜம்மு கஷ்மீரில் இந்த சோதனைகள் நடைபெற்று வருவதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

14 பேருக்கு சொந்தமான இடங்களில் இந்த சோதனை நடைபெறுவதாகவும் அந்த செய்திகள் கூறுகின்றன.

<<<<>>>>>

குஜராதில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர், 10 பேர் காயமடைந்தனர்.

Surendranagar மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் சென்று கொண்டிருந்த பேருந்து, டேங்கர் லாரி மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாகவும், இதில் பேருந்து தீப்பிடித்து எரிந்ததாகவும் அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<>>>>>

அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப், சீன அதிபர் திரு. Xi Jinping இடையேயான பேச்சுக்கள் இன்று பெய்ஜிங்கில் நடைபெற்றன.

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும், பல்வேறு சர்வதேச விவகாரங்கள் குறித்தும் இரு தலைவர்களும் பேச்சு நடத்தியதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னதாக, இந்த பேச்சுவார்த்தை, அமெரிக்கா - சீனா இடையேயான நல்லுறவில் புதிய அத்தியாயத்தின் தொடக்கமாக இருக்கும் என்று திரு. டோனல்ட் ட்ரம்ப் சமூகவலைதளத்தில் பதிவிட்டிருந்தார்.

<<<<>>>>>

தாய்லாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-13, 21-15 என்ற செட்கணக்கில் டென்மார்க்கின் Amalie Schulz-ஐ வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில். சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை 21-12, 21-19 என்ற செட்கணக்கில் மலேசியாவின் Haikal Muhammad - Goonting Bryan Jeremy இணையை வென்று, காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<END>>>>>